# அகண்ட தமிழ் உலகம்

# திருக்குறள் மாநாடு

## மட்டக்களப்பு, இலங்கை - 2026



"உலகளாவிய அறப்பாதைக்கு வள்ளுவம் காட்டும் வாழ்வியல்"

## குறும்படப் போட்டி

**அகண்ட தமிழ் உலகம் எனும் அமைப்பானது, உலகம் முழுவதும் வாழும் தமிழர்களை ஒரே பண்பாட்டுத்தளத்தில் இணைக்கும் நோக்குடன், உலகளாவிய ரீதியில் 47க்கு மேற்பட்ட நாடுகளில் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றது. இது தமிழர் பண்பாட்டையும் விழுமியத்தினையும் பாதுகாத்து வளர்ப்பதோடு, உலகில் வாழும் தமிழரிடையே ஒற்றுமையினையும் ஒத்துழைப்பினையும் முன்னேற்றத்தினையும் வலுப்படுத்தி முன்கொண்டுசெல்வதில் முனைப்புடன் செயற்பட்டுவருகின்றது.**

**அறத்தினை முதன்மையாகக்கொண்ட, தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறள், உலகம் தழுவிய நிலையில் இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், சீனம், ரஷியன் முதலிய 60க்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அதன்பொருண்மை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்படுகின்றது. இத்தகைய பெருமைபெறும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளினைப் போற்றும் திருக்குறள் மாநாடு, உலகளாவிய "அறப்பாதைக்கு வள்ளுவம் காட்டும் வாழ்வியல்" என்னும் கருப்பொருளினைக் கொண்டு இலங்கையில் மட்டக்களப்பு மண்ணிலே சிறப்பாக இடம்பெற உள்ளதோடு, தமிழர் சமூகம் பயன்பெறக் குறும்படப் போட்டி ஒன்றும் நடைபெற உள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, இப்போட்டியில் பங்குகொண்டு, எமது வாழ்வியல் நெறியினை வளமூட்டும் வள்ளுவத்தின் பொருண்மையினையும் உணர்ந்து செயற்படுவோம்.**

### நோக்கம்

- திருக்குறளின் பொருண்மையினை தொழினுட்பத்தின் மூலம் வெளிப்படுத்தல்.

### தலைப்பு

- வள்ளுவம் கூறும் "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"
- முப்பால் ஒழுக இறையடி சேர்வர் (அறம், பொருள், இன்பம்)
- வாய்மையோடு இனியவை கூறல்

## மொழி

- தமிழ் வசனம் அவசியம்

## கால அளவு

03 – 05 நிமிடங்கள் வரை
(அனைத்தும் உள்ளடங்கலாக)

## பங்கேற்பாளர்கள்

- பல்கலைக்கழகம், உயர்தரம் கற்கும் மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள்
- தனியாகவும் குழுவாகவும் பங்கேற்கலாம்

## விதிமுறைகள்

- சமூகத்துக்கு நல்ல செய்தியினை வழங்க வேண்டும்.
- தமிழ் மற்றும் சமயம் சார்ந்த வகையில் பொருண்மை அமையப்பெறுவதனால், ஆடை வடிவமைப்புகள் அதற்கேற்றாப்போல் இருக்கவேண்டும்.
- தமிழர் பண்பாடு, சமய மற்றும் ஒழுக்கநெறியினை பின்பற்றியிருத்தல் வேண்டும்.
- முரணான காட்சிகள் இடம்பெறுமாயின் அது தணிக்கைக்குட்படுத்தப்படும்.
- இதற்குமுன்னர் வெளியிடப்படாத பங்கேற்பாளர்களின் சொந்த படைப்பாக இருக்க வேண்டும்.
- Video Format : MP4 Resolution : 1800 x 1920 (HD)
- காணொளி விகிதம் (Video Ratio) : 16:9
- படம், ஒலி என்பன தெளிவாக இருக்கவேண்டும்.
- செயற்கைத் தொழினுட்பத்தினை பயன்படுத்திய காட்சியமைப்புக்கள் காணொளியில் இடம்பெறலாகாது.

## சமர்ப்பிப்பு முறை

- குறும்படத்தை மின்னஞ்சல் மூலம் (onedrive/Google drive link etc.) இனை பயன்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.
- பின்வரும் தரவுபடிவத்தின் மூலம் (Google Form) சுயமாக பதிவினை மேற்கொள்ள வேண்டும். https://forms.gle/2RuE1oNBft6nyYPV9
- இறுதி திகதி : 2026.06.10


**தொடர்புகள்**

அகண்ட தமிழ் உலகம்
இல 33, சரவணா வீதி,
கல்லடி, மட்டக்களப் பு.

**மாநாட்டுத் தலைவர்**
பேராசிரியர் வ. கனகசிங்கம்

**மாநாட்டுச் செயலாளர்**
கலாநிதி ம. சுயாநிதி

**திட்ட ஒருங்கிணைப்பாளர்**
பேராசிரியர் ந. இராஜேஸ்வரன்

+94 70 6080 207
akthuthiru@gmail.com
திருக்குறள் மாநாடு
www.akthuthiru.lk